72—

ஒருங்கிணைந்த விளையாட்டுப் பயிற்சி வளாகம்

***14315—திரு. கே.ஆர். ஜெயராம்:**

மாண்புமிகு சுற்றுச்சூழல்—காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிங்காநல்லூர் தொகுதி, கொடிசியா வளாகம் பின்புறம் உள்ள அரசு காலியிடத்தில் சர்வதேச தரத்துடன்கூடிய ஒருங்கிணைந்த விளையாட்டுப் பயிற்சி வளாகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன், சுற்றுச்சூழல்—காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள சிங்காநல்லூர் சட்டமன்றத் தொகுதி, கொடிசியா வளாகம் பின்புறம் உள்ள அரசு காலியிடத்தில் சர்வதேசத் தரத்துடன்கூடிய ஒருங்கிணைந்த விளையாட்டுப் பயிற்சி வளாகம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஆர். ஜெயராம் அவர்கள்.*

திரு. கே.ஆர். ஜெயராம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மாமன்றத்திலே என்னைப் போன்றவர்கள் பேசுவதற்கு வாய்ப்பினை உருவாக்கிய, கழகத்தினுடைய நிறுவனர், வங்கக் கடலோரம் சந்தனப் பேழையில் துயில் கொண்டிருக்கின்ற தங்கத் தலைவன், மண்ணைவிட்டு மறைந்தாலும், மக்கள் மனதைவிட்டு மறையாத மனிதப் புனிதர் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆசியோடும், (மேசையைத் தட்டும் ஒலி) என்னைப் போன்றவர்களுக்கு அரசியலில் வழிகாட்டி, எங்களையெல்லாம்*

2022 ஏப்ரல் 7]

வழிநடத்திச் சென்றுகொண்டிருக்கக்கூடிய, இந்தியாவின் இரும்பு மங்கை, தென்னகத்து ஜான்சி ராணி, (மேசையைத் தட்டும் ஒலி) 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்று வாழ்ந்து மறைந்த மனிதப் புனிதவதி, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆசியோடும், இருபெரும் தலைவர்களின் மறைவுக்குப் பின்பு, இன்றைக்கு இந்தக் கழகத்தைக் கட்டிக் காத்து வருகின்ற மருது சகோதரர்களான கழகத்தினுடைய இணை ஒருங்கிணைப்பாளர் மாண்புமிகு தமிழ்நாடு சட்டப் பேரவை எதிர்க்கட்சித் தலைவர் அருமை அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்களுடைய ஆதரவோடும், (மேசையைத் தட்டும் ஒலி) கழகத்தினுடைய ஒருங்கிணைப்பாளர் மாண்புமிகு தமிழ்நாடு சட்டப் பேரவை எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அருமை அண்ணன் திரு. ஓ.பி.எஸ் அவர்களுடைய ஆதரவோடும், (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மாமன்றத்திலே பேசுகின்ற வாய்ப்பினை உருவாக்கிக் கொடுத்த, கொங்கு மண்டலக் காவலர், முன்னாள் உள்ளாட்சித் துறை அமைச்சர், உள்ளாட்சியிலே பல்வேறு சாதனைகளைச் செய்து. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், கேள்விக்கு வாருங்கள்.*

திரு. கே.ஆர். ஜெயராம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே நிமிடம். நான் முதன்முதலாகப் பேசுகிறேன். ஒரே நிமிடம் ஐயா. 10 ஆண்டுகளில் உள்ளாட்சியில் மத்திய அரசின் 143 விருதுகளைப் பெற்று, இன்றைக்கு சட்டமன்றத்தின் எதிர்க்கட்சிக் கொறடாவாகப் பணியாற்றிக் கொண்டிருக்கும் அருமை அண்ணன் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்களுடைய ஆதரவோடும், இந்த மாமன்றத்தில் பேசுகின்ற வாய்ப்பினை நல்கிய என்னுடைய சிங்காநல்லூர் தொகுதியைச் சார்ந்த வாக்காளப் பெருமக்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம், சிங்காநல்லூர் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் பெரும்பாலும் பல்வேறு பள்ளிகள் மற்றும் கல்லூரிகளைச் சேர்ந்த மாணவ, மாணவிகளும் மற்றும் தகவல் தொழில்நுட்பப் பூங்காக்களில் பணிபுரியும் இளைஞர்களும் வசித்து வருகிறார்கள். இவர்களில் சுமார் 2,000–க்கும் மேற்பட்ட இளைஞர்கள் நாள்தோறும் கொடிசியா வளாகத்தின் அருகில் உள்ள காலியிடத்தில்

விளையாடி வருகின்றனர். மேலும், விடுமுறை நாட்களில் 1,000–க்கும் மேற்பட்ட இளைஞர்கள் விளையாட இடமின்றி தவிக்கின்றனர். இவர்களை ஊக்குவிக்கின்ற வகையில் சர்வதேசத் தரத்துடன்கூடிய ஒருங்கிணைந்த விளையாட்டுப் பயிற்சி வளாகம் அமைத்துத் தர பல தரப்பினரும், இளைஞர்களும் கோரிக்கை வைத்துள்ளனர். அவ்வாறு அமைத்துத் தரும்பட்சத்தில், பல்வேறு விளையாட்டு வீரர்களை நம்மால் உருவாக்க முடியும். எனவே, சர்வதேசத் தரத்துடன்கூடிய ஒருங்கிணைந்த விளையாட்டுப் பயிற்சி வளாகத்தை அமைத்துத் தர இந்த அரசு முன்வருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்க விழைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். இது அவர்களுடைய கன்னிப் பேச்சு.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பணிவான வேண்டுகோள். மாண்புமிகு உறுப்பினர் முதன்முறையாகப் பேசுகிறார். ஒவ்வொருவருக்கும் அவர்களுடைய தலைவர்கள்மீது, பக்தி உண்டு. அவர்களுக்கு வணக்கம் செலுத்துவதற்கு உரிமை உண்டு. ஆனால், பொதுவாக கேள்வி நேரத்தில் அவை குறைக்கப்பட வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து. ஏனென்றால், கேள்வி என்பது மிகவும்* short *ஆக, டக், டக்கென்று, கேட்க வேண்டும். அதனால், தயவு செய்து, கேள்விகளைக் கேட்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் சுருக்கமாகக் கேட்க வேண்டும். அதேமாதிரி, மாண்புமிகு அமைச்சர்களும் சுருக்கமாகப் பதில் சொல்ல வேண்டும். இல்லையென்றால், வினாக்கள்–விடைகள் நேரம் நீண்டுவிடும். இன்றைக்கு இரண்டு அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டும். வினாக்கள்–விடைகள் நேரமே 12–00 மணி வரை சென்றால், அவையின் அலுவல்களை முடிப்பதற்கு பிற்பகல் 3–00 மணி, 4–00 மணி ஆகிவிடும். ஆகையினால், அருள்கூர்ந்து அதனைப் பின்பற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதனால், கேள்வியைச் சுருக்கமாகக் கேட்கச் சொல்லுங்கள்.*

இரண்டாவது, மூலக் கேள்வி கேட்கின்ற உறுப்பினர்களுக்குத்தான் இரண்டு துணைக் கேள்விகள் கேட்க வாய்ப்புக் கொடுக்க வேண்டும். Supplementary *கேள்விகளைக் கேட்கின்ற உறுப்பினர்கள், பிரசங்கமே நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.* Supplementary *கேள்வி கேட்கின்ற*

2022 ஏப்ரல் 7]

உறுப்பினர்கள் ஒரு கேள்விதான் கேட்க முடியும். ஆகவே, வினாக்கள்—விடைகள் நேரத்தை நீங்கள்தான் முடிவு செய்ய வேண்டும். ஆகையினால், 11—00 மணி ஆனவுடன், bell அடித்துவிட்டு, வினாக்கள்—விடைகள் நேரத்தை முடித்துவிடுங்கள். அதற்குப் பிறகு கேள்விகள் இருந்தாலும் பரவாயில்லை. அடுத்த வாய்ப்பில் அவற்றை எடுத்துக்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுச்சூழல்—காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11—10

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள நேரு விளையாட்டு அரங்கமானது, 1971—1974 ஆம் ஆண்டுகளில், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அய்யா அவர்களின் ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்டது. இந்த மாவட்ட விளையாட்டு அரங்கத்தில் 30,000—க்கும் மேற்பட்டோர் அமர்ந்து பார்க்கக்கூடிய திறந்தவெளி விளையாட்டு அரங்கம் உள்ளது; செயற்கை ஓடுதளம் உள்ளது; கால்பந்தாட்ட மைதானம் உள்ளது; மேலும், உடற்பயிற்சிக் கூடம் உட்பட பல்வேறு வசதிகள் அந்த மாவட்ட விளையாட்டு அரங்கத்தில் இருக்கின்றன. இதனை கோவை மாவட்டத்திலுள்ள அனைத்து விளையாட்டு வீரர்களும், வீராங்கனைகளும் பயன்படுத்தி வருகின்றனர். நேரு விளையாட்டு அரங்கத்தில் இருக்கின்ற synthetic track பராமரிப்பின்றி இருந்தது. அது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டவுடன், 400 மீட்டர் செயற்கை ஓடுதளப் பாதையைப் புதிதாக மாற்றுவதற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உடனடியாக 6 கோடியே 46 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து, அந்தப் பணி தொடங்க இருக்கின்றது என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், அந்த விளையாட்டு அரங்கினைச் சீரமைப்பதற்காக, கூடுதலாக 50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, அதற்கான பணிகளும் நடைபெற்று வருகின்றன. இந்த மாவட்ட விளையாட்டு அரங்கினை ஒட்டுமொத்தமாக அனைத்து வீரர்களும் பயன்படுத்தி வருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்ன கொடிசியா வளாகத்தின் பின்புறத்திலுள்ள

காலியிடமானது, ஒட்டுமொத்தமாக பூமிதான வாரியத்திற்குப் பாத்தியப்பட்ட இடமாகும். அந்த இடத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தமிழக விளையாட்டு மேம்பாட்டு வாரியத்திற்கு ஒப்படைக்கும்பட்சத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடமிருந்து கருத்துருக்கள் பெறப்பட்டு, அந்தப் பகுதியில் ஒருங்கிணைந்த சர்வதேச தரத்திலான விளையாட்டுப் பயிற்சி வளாகம் அமைப்பதற்கான கருத்துருக்கள் ஆய்விற்கு உட்படுத்தப்பட்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஆர். ஜெயராம் அவர்கள்.*

திரு. கே.ஆர். ஜெயராம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைக்கு அடுத்தபடியாக வளர்ந்துவரும் நகரங்களில் கோவை நகரமும் ஒன்று. கோவை மாநகராட்சியானது, 72 வார்டுகளிலிருந்து 100 வார்டுகளாக விரிவுபடுத்தப்பட்ட நிலையில், சுமார் 25 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் அங்கு வசித்துவருகின்றனர். அங்கு விளையாட்டுப் பயிற்சிக்காக, நேரு விளையாட்டு அரங்கம் மட்டுமே உள்ளது. இந்தச் சூழ்நிலையில் அந்த அரங்கத்தில் போதுமான இடவசதி இல்லாததாலும், நேரு விளையாட்டு அரங்கத்திற்கு சுமார் 10 கி.மீ. தூரம் செல்ல வேண்டியுள்ளதாலும், கால விரயம் ஏற்படுகிறது. எனவே, கொடிசியா வளாகத்தின் பின்புறம் உள்ள பூமிதான வாரியத்திற்குச் சொந்தமான 8 ஏக்கர் அரசு நிலப்பரப்பில், கால் பந்து, கூடைப் பந்து,* Badminton, skating, cricket *உள்ளிட்ட விளையாட்டுக்களில் பயிற்சி பெற சர்வதேச தரத்துடன்கூடிய ஒருங்கிணைந்த விளையாட்டுப் பயிற்சி வளாகம் அமைக்க வேண்டிய அவசியம் எழுந்துள்ளது. எனவே, மாண்புமிகு சுற்றுச்சூழல்—காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் இந்தக் கோரிக்கையினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுசென்று, கோவையில் ஒருங்கிணைந்த விளையாட்டுப் பயிற்சி வளாகம் அமைக்க ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக்*

2022 ஏப்ரல் 7]

கொண்டு செல்வேன் என்று சொல்லிவிட்டார், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்றி சொல்லி உரையை முடித்திருக்கலாம். மாண்புமிகு சுற்றுச்சூழல்—காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள், மறுபடியும் சொல்ல வேண்டாம், பதிலை மட்டும் சொன்னால் போதும்.

மாண்புமிகு திரு. சிவ.வீ. மெய்யநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றவுடனேயே, சட்டமன்றத் தொகுதிக்கு Mini Indoor Stadium என்கின்ற ஒரு புதிய திட்டத்தைத் தந்திருக்கின்றார்கள். அந்தத் திட்டத்தின் அடிப்படையில், மேற்குறிப்பிட்ட இடமானது ஆய்விற்கு உட்படுத்தப்பட்டு, பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, அந்த இடத்தில் விளையாட்டு மைதானம் அமைப்பதற்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 73, மாண்புமிகு உறுப்பினர் திரு. A.K. செல்வராஜ், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

73—

இலவச வீட்டுமனைப் பட்டா

***3271—திரு. A.K. செல்வராஜ்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம் தொகுதியில் வசிக்கும் ஆதி திராவிடர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி என். கயல்விழி செல்வராஜ், ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பகுதியில், ஏற்கெனவே